**கவனிக்க.**- 2007.03.02 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1488 - 2007 මාර්තු 09 වැනි සිකුරාදා - 2007.03.09

1488 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 162 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 162 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, மாச்சு 16 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, மாச்சு 02 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அட்டோர்னி தத்துவத்தை இரத்துச் செய்தல்

களுத்துறை நாகொட ஹீனடியன்கல வீதி, 75 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த இப்போது ஜர்மனி பிரைவல்ட் விவவேக் 17, 12205 பர்லின்னில் வதியும் கலாநிதி தேநுவர ஆச்சாரிகே பியசிறி ஆகிய என்னால், களுத்துறை நாகொடை சந்தர்ஷனாராம வீதி 223/3 ஆம் இலக்கத்தில் வதியும் தேநுவர ஆச்சாரிகே விஜேசிறி என்பவருக்கு உரிமையை வழங்கும் 1999, ஒகத்து 6 ஆந் திகதி கொண்ட களுத்துறை மாவட்டத்தில் பகிரங்க நொத்தாரிசு பிரியந்த தேவபிரிய ஹெட்டியாராச்சி என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட 920 ஆம் இலக்கம் கொண்ட ஆட்டோர்ணி தத்துவத்தை இங்கு குறிப்பிடப்பட்ட திகதி தொடக்கம் இரத்து செய்து செல்லுபடியற்றதாக்குகிறேன் என இத்தால் பொதுமக்களுக்கும் இலங்கை குடியரசுக்கும் அறிவிக்கின்றேன்.

கூறப்பட்ட அட்டோர்னி தத்துவம் மூலமாக இன்று தொடக்கம் மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பாக மாட்டேன் எனவும் இத்தால் தெரிவிக்கின்றேன்.

கலாநிதி தேநுவர ஆச்சாரிகே பியசிறி.

2007.02.02

3-228

---

## அட்டோர்ணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கீழே கையொப்பமிடும் இங்கிலாந்து, போர்த் மவுன் ஸ்டுவர்க்ல்பஸ் எவனியூ, இல. 26 இல் வசிக்கும் ஷெராணி லவீனா ஏன் த மெல் ஆகிய என்னால் இலங்கை, தங்கொட்டுவை, போலவத்தை, இல. 75 இல் வசிக்கும் திஸாநாயக்க அர்னஸ்ட் நெவில் பெரேரா அவர்களுக்கு வழங்கப்பட்ட ஐக்கிய இராச்சியத்தின் கவுன்சிலில் சத்தியப்பிரமாண ஆணையாளராகிய சீ. எச். கமர் இனால் உறுதிப்படுத்தப்பட்ட 2002.11.13 ஆந் திகதிய அட்டோர்ணித் தத்துவத்தை 2007, சனவரி மாதம் முதலாம் (1) திகதி செயலிழக்கச் செய்து இரத்துச் செய்துள்ளேன் எனவும் இதன் பிறகு அட்டோர்ணித் தத்துவம் அதிகாரம் அற்றது எனவும் பொதுமக்களுக்கு அறியத்தருகின்றோம்.

குறிப்பிட்ட திஸாநாயக்க அர்னஸ்ட் நெவில் பெரேரா இதன் பிறகு எனது அட்டோர்ணித் தத்துவதாரர் அல்ல என்பதையும் அவரால் மேற்கொள்ளப்படும் அல்லது செயற்பாடுகளுக்கும் கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பு அல்ல என்பதையும் தெரியப்படுத்து கிறேன்.

ஷெராணி லவீனா ஏன் த மெல்.

3-356

---

## அட்டோர்ணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 195/5, சென்தநாயக்க மாவத்தை, நேபொட வீதி மத்துகமயில் வசிக்கும் பூஜித சென்தநாயக்க ஆகிய நான், இவ் விலாசத்தில் வசித்து வரும் சின்தானி சென்தநாயக்க ஆகியவருக்கு களுத்துறை உயர் நீதிமன்ற நீதிபதியும் பிரசித்த நொத்தாரிசுமான திருமதி கமணி சயாமலி யாபா என்பவரால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள இல. 2557 உம் 2005.03.02 ஆந் திகதியுடைய அட்டோர்ணி தத்துவ உரிமை பத்திரத்தில் தரப்பட்டுள்ள அட்டோர்ணி உரிமை இரத்துச் செய்யப்பட்டுள்ளது டன், இனிமேல் மேற்குறிப்பிடப்பட்ட சின்தானி சென்தநாயக்க, அவ் அட்டோர்ணி உரிமைப்பத்திரத்தில் செயல்படுத்தப்படும் எவ்வித செயலுக்கும், கொடுக்கல் வாங்களுக்கும் எனது எவ்வித பொறுப்பும் இல்லையென்பதையும் அத்தகைய அவளது நடைமுறைகளும் கொடுக்கல் வாங்கல்களும் செல்லுபடியற்றது என்பதையும் சகல பொதுமக்களுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

பூஜித சென்தநாயக்க.

3-254

---

# ஏல விற்பனைகள்

## ஹட்டன் நஷனல் வங்கி – ஹோமாகம கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்களை மீள அறவிடும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை

### பெறுமதியான சொத்தின் ஏலவிற்பனை

**உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் என். பீ. எல்விட்டிகல அவர்களால் 2001 செத்தெம்பர் 02 ஆந் திகதியிடப்பட்டுத் தயாரிக்கப்பட்ட வரைபட இல. 1857 இல் துண்டு 2 எனக் குறிக்கப் பட்ட, காணியிலிருந்தும் வெளியிலிருந்தும் தலகொட்டுவாவத்த என அழைக்கப்படும் பிரிக்கப்பட்ட நிர்ணயிக்கப்பட்ட காணியானது மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் ஹேவாகம் கோறளை பள்ளே பற்றுவில் ஹோமாகம பிரதேச சபை எல்லைக்குள் ஹிரிபிட்டியவில் அமைந்துள்ளது.**

**காணியின் விஸ்தீரணம் : (0ஏ. 0றூ. 09.75பே.)**

*(கடமைப்பட்டவரும் சொத்தை ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட்டிற்கு ஈடுவைத்தவருமான பொல்வத்த கீகமகே பிரியந்த ஜயரட்ன, கொழும்பு பிரசித்த நொத்தாரிசு கே. சேனாநாயக்க அவர்களால் 2004.12.17 ஆந் திகதியிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிணை முறி இல. 1321 இல் கொடுப்பனவு தவறியுள்ளார்.)*

ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட்டால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், கீழே குறிப்பிடப்படும் சொத்து, அதே இடத்தில் 2007 மாச்சு 23 ஆந் திகதி பி. ப. 3.00 மணிக்கு என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- தயவுசெய்து 2006.08.11 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2006 ஓகத்து 15ஆந் திகதிய "ஐலண்ட்", "திவயின", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- ஏலத்தின் இறுதியில் சித்திகரமான கொள்வனவாளர், பின்வரும் தொகைகளைப் பணமாகச் செலுத்தல் வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூராட்சி அதிகார சபைக்குச் செலுத்த வேண்டிய விற்பனை வரி 1% மற்றும் வற் ;
(3) ஏலதார் தரகுப்பணமாக விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(4) விற்பனைக்கான மொத்த விளம்பரச் செலவும் ஏனைய அறவீடுகளும் ;
(5) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுகளின் அத்தாட்சிப்படுத்தற் கட்டணமாக ரூபா 2,000.

விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்வனவு விலையின் எஞ்சிய 90% ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட்டில் வைப்பிலிடப்படல் வேண்டும்.

மேலதிக விவரங்கள் காணி உறுதி ஏனைய தொடர்புடைய ஆவணங்களைப் பரீட்சிக்கவும் பெறவும் "ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட்-ஹோமாகம கிளை, முகாமையாளர்" அல்லது "தலைமையலுவலகம், ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட், கடன் மேற்பார்வை மற்றும் மீளப்பெறுகைத் திணைக்கள பிரதம முகாமையாளரை"த் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இலக்கம் : 2661815, 2661816.

ரஞ்ஜித்த எஸ். மஹநாம,
சமாதான நீதவான் (அகில இலங்கை),
நீதிமன்ற ஆணையாளர்,
மதிப்பீட்டாளர், உத்தரவுபெற்ற
ஏலதாரர்.

ஆர். எஸ். எம். ஒக்ஷன்ஸ்,
மஹாநாம ட்ரைவ்,
இல. 474, பிட்டகோட்டே,
கோட்டே.
தொலைபேசி இல. 2863121

3-307/1

---

## ஹட்டன் நஷனல் வங்கி - ஹோமாகம கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்களை மீள அறவிடும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

### பெறுமதியான சொத்தின் ஏலவிற்பனை

*(கடமைப்பட்டவரும் சொத்தை ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட்டிற்கு ஈடுவைத்தவருமான சந்திரிகா தல்கல, கொழும்பு பிரசித்த நொத்தாரிசு கே. சேனாநாயக்க அவர்களால் 2004 ஒற்றோபர் 12 ஆந் திகதியிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட முறி இல. 1254 இல் கொடுப்பனவு தவறியுள்ளார்.)*

ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட்டால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், கீழே குறிப்பிடப்படும் சொத்து, அதே இடத்தில் 2007 மாச்சு 23 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**ஆதனத்தின் விவரணம்.**- உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. ஏ. கே. ஜே. பெரேரா அவர்களால் 1996 பெப்புருவரி 29 ஆந் திகதியிடப்பட்டுத் தயாரிக்கப்பட்ட வரைபட இல. 1045 இல் துண்டு 1 சீ எனக் குறிக்கப்பட்ட, பிரிக்கப்பட்ட நிர்ணயிக்கப்பட்ட காணியிலிருந்தும் வெளியிலிருந்தும் "கோங்கஹவத்த" என அழைக்கப்படும் காணி அதிலுள்ள கட்டிடம் மற்றும் அனைத்துமுடன் தற்போது மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் அம்பலலென்பஹல அலுத்குரு கோறளை தெற்கில் கொலன்னாவ நகரசபை எல்லைக்குள் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு கே. சேனாநாயக்க அவர்களால் 2004 ஒற்றோபர் 12 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 1254 இன் இரண்டாவது அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள பாதைக்கான உரிமையுடன் மீதொட்டமுல்ல, தேவால வீதி, வரிமதிப்பீட்டிலக்கம் 7 இல் அமைந்துள்ளது. விஸ்தீரணம் : 4.30 பேர்ச்சுகள்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 2006.12.29 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2007 சனவரி 18 ஆந் திகதிய "ஐலண்ட்", "திவயின", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- ஏலத்தினிறுதியில் சித்திகரமான கொள்வனவாளர், பின்வரும் தொகைகளைப் பணமாகச் செலுத்தல் வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூராட்சி அதிகார சபைக்குச் செலுத்த வேண்டிய விற்பனை வரி 1% ;
(3) ஏலதாரர் தரகுப்பணமாக விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(4) விற்பனைக்கான மொத்த விளம்பரச் செலவு ;
(5) கிளார்க் கூவுவோர் கட்டணமாக ரூபா 500 ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுகளின் அத்தாட்சிப்படுத்தற் கட்டணமாக ரூபா 2000.

விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்வனவு விலையின் மிகுதி 90% விற்பனைத் திகதியில் இருந்து 30 வேலை நாட்களுக்குள் ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட்டிற்குச் செலுத்தப்படல் வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்டவாறு, எஞ்சிய தொகை குறிப்பிட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிடின் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% ஐப் பறிமுதல் செய்து மீள விற்பனை செய்யவும் உரிமை வங்கிக்குண்டு.

மேலதிக விவரங்களும் உரித்துறுதிகளும் சம்பந்தப்பட்ட வேறு ஆவணங்களும் ஹோமாகம கிளையின் முகாமையாளரிடம் (தொ. பே. இல. 2857126, 4440846) இல் அல்லது கொழும்பு 10,

டீ.பீ. ஜாயா மாவத்தை, இல. 479, ஹ.ந.வ. கோபுரம், ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் பிரதம முகாமையாளர் (மீளப்பெறல்) அவர்களிடம் பெறலாம்.

தொலைபேசி இலக்கம் : 011- 2661815, 2661816.

ரஞ்ஜித்த எஸ். மஹநாம,
சமாதான நீதவான் (அகில இலங்கை),
நீதிமன்ற ஆணையாளர்,
மதிப்பீட்டாளர், உத்தரவுபெற்ற
நிலஅளவையாளர்,
தொலைபேசி இல. 2863121

ஆர். எஸ். எம். ஒக்ஷன்ஸ்,
மஹாநாம ட்ரைவ்,
இல. 474, பிட்டகோட்டே,
கோட்டே.

3-307/2

---

## மக்கள் வங்கி-வெலிகம கிளை

*1982 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தின்கீழ் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் கீழ் 29டி அதிகாரத்தின் கீழ் விற்பனை அறிவித்தல்*

### சொத்து ஏல விற்பனை

மக்கள் வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் என்னால் கீழ் குறிப்பிட்ட விவரங்களை கொண்டு சொத்துக்கள் 2007.03.27 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு சொத்துக்கள் அமைந்த இடத்திலேயே பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

**சொத்துக்கள் பற்றிய விவரணம்.**- (1) தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்திலே வெலிகம் கோரளையில் ஊருவிடிகேயில் அமைந்துள்ள தென் சரிலிமவுண்ட் தோட்டம் என்ற காணியை பிரித்து வேறாக்கப்பட்ட இலக்கம் 06 என்ற இருபத்துஆறு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 26பே.) எனும் மிகப்பெரிய காணியும் அதிலுள்ள அனைத்துப் பயிர்ச்செய்கை, கட்டிடங்கள் அடங்கலாக.

(2) மேலே கூறப்பட்ட ஊருவிடிகேயில் அமைந்துள்ள தெற்கு சாலிமவுண்ட் தோட்டம் எனும் காணியை பிரித்து வேறாக்கப்பட்ட இலக்கம் 61 என்ற இருபத்தொன்பதும் தசம் ஒன்று பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 29.1) கொண்ட மிகப்பெரிய காணியும், அங்குள்ள அனனத்து பயிர்ச்செய்கை, கட்டிடங்கள் அனைத்துமாகும்.

**தீர்மான அறிவித்தல்களுக்கு.**- 2000.12.29 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2001.12.20 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "தினமின" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**சொத்துக்களுக்கு பிரவேசித்தல்.**- வெலிகம அகுரெஸ்ஸ பாதையில் ஊருவிடிகே பிரதேசத்தில் வீதியில் எல்லையாக சாலிமவுண்ட் தோட்டத்தில் இக்காணி அமைந்திருக்கும்.

**கொடுப்பனவு செலுத்த வேண்டிய முறை.**- வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்);
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தவேண்டிய உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதம்);
(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்);
(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500;
(5) விற்பனைச் செலவு மற்றும் வேறேதேனும் கட்டணங்கள் (எவையேனுமிருப்பின்);
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மக்கள் வங்கி மாத்தறை பிரதேச பிரதான அலுவலகத்தில் பிரதேச முகாமையாளர் அவர்களுக்கு செலுத்த வேண்டும். தொலைபேசி இல. : 041-2222792, 2222822, 2224773 ; பெக்ஸ் இல. 041- 2222688.

உரிமைகோரும் ஒப்பனையையும் வேறும் விவரங்களையும் மேலுள்ள முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலே குறிப்பிட்டபடி குறிப்பிட்ட பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) தண்டப் பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள்விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

ஜீ. பீ. ஆனந்த,
அதிகாரம்பெற்ற ஏலவிற்பனையாளரும்,
நீதிமன்ற ஆணையாளரும், மதிப்பீட்டாளரும்.

குருந்துவத்த,
கல்கம,
மாத்தறை.
தொலைபேசி இல. : 041- 2228731

3-338

---

## இலங்கை வங்கி

*1968 ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை செய்தல் தொடர்பான அறிவித்தல்*

### சொத்து, நிலமனை ஏலவிற்பனை

*(இலக்கம் 101, இலுக்மோதர, குருதெனிய என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. மெதவல கெதர ஜயபால என்பவருக்குச் சொந்தமான ஆதனம்)*

தொடர்பிலக்கம் : எல்என்/1321/99.

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கமைய

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 24.09.2004 ஆந் திகதிய இலக்கம் 1360 கொண்ட வர்த்தமானியிலும் 13.09.2004 ஆந் திகதிய "தினமின", "தினகரன்", "டெய்லி நியூஸ்" ஆகிய புதினப் பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாகவுள்ள வட்டியையும் செலவு மற்றும் மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின்கீழ் அறவிடக்கூடிய பணங்களையும் அறவிடும் பொருட்டு இதன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள சொத்தும் நிலமனையும் இல. 24, ரொறிங்டன் றோட், கண்டி என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திருவாளர்கள் சொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களால் 29.03.2007 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

1. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பாத்தஹேவாஹெற்ற கன்தஹுய கோறளை, (G) கோனவத்தவில் அமைந்துள்ள, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஏ. பியதாச அவர்களால் தயாரிக்கப்பட்ட 1999, மாச்சு 24 ஆந் திகதிய 177/03/99 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் காட்டப்பட்டுள்ள "(G) கோனவத்த" வின் (உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. எச். எம். நவரத்ன அவர்களால் தயாரிக்கப்பட்ட 1996, யூன் 17 ஆந் திகதிய 10830 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 2) பாகமொன்றாகிய மேற்குறிப்பிட்ட வரைபடத்திற்கிணங்க- வடக்கில் : உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. எம். எச். நவரத்னவின் 10830 ஆம் இலக்க வரைபடத்தின் துண்டு 1 உம் ; வடகிழக்கில் : துண்டு 3B உம் ; தென்கிழக்கில் : 2 ஆம் துண்டும் ; தெற்கில் : துண்டு 2 உம், பெருந்தெருவிலிருந்து வீடுகளிற்குச் செல்லும் றோட்டும் ; தென்மேற்கில் : பெருந்தெருவிலிருந்து வீடுகளுக்குச் செல்லும் றோட்டும் ; வடமேற்கில் : உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. எம். எச். நவரத்ன அவர்களின் 10830 ஆம் இலக்க வரைபடத்தின் துண்டு 1 உம் எல்லைகளாகக் கொண்ட இருபத்தைந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 25பே.) விஸ்தீரணமுடைய பிரித்து நிர்ணயிக்கப்பட்டுள்ள காணித்துண்டு முழுவதும் அதற்குள் உள்ள அனைத்துமாகும். இது கண்டி காணிப்பதிவகத்தில் ஜி. 336/ 259 ஆம் பக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

2. மேற்குறிப்பிட்டவாறு (G) கோனவத்தவில் அமைந்துள்ள, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஏ. பியதாச அவர்களால் தயாரிக்கப்பட்ட 1999, மாச்சு 24 ஆந் திகதிய 177/03/99 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 3B எனக் காட்டப்பட்டுள்ள "(G) கோனவத்த" (உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. எம். எச். நவரத்ன அவர்களால் தயாரிக்கப்பட்ட 1996.06.17 ஆந் திகதிய 10830 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 2) என்றழைக்கப்படும் காணியின் பாகமொன்றாகிய- வடக்கில் : 1 ஆம் துண்டின் பாகமும் ; வடகிழக்கில் : துண்டிலக்கம் 3ஏஉம் ; கிழக்கில் : இலக்கம் பிபி. மஹா. 2751 கொண்ட வரைபடத்தின் 50 ஆம் துண்டும் ; தெற்கில் : பிபி. மஹா. 2751 ஆம் இலக்க வரைபடத்தின் துண்டு 51 உம் ; தென்மேற்கில் : 2 ஆம் துண்டும் ; மேற்கில் : துண்டு 1 உம் ; வடமேற்கில் : 1 ஆம் துண்டும் எல்லைகளாகக் கொண்ட பதினைந்து தசம் பூச்சியம் ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 15.05பே.) விஸ்தீரணமுடைய பிரித்து நிர்ணயிக்கப்பட்டுள்ள முழுக் காணியும் அதற்குள் உள்ள அனைத்துமாகும். இது கண்டி காணிப் பதிவகத்தில் ஜி. 336/260 ஆம் பக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஈ. எம். யூ. பண்டார,
பிரதான முகாமையாளர்.

இலங்கை வங்கி,
மேற்தரக் கிளை,
கண்டி.

3-354

## ஹட்டன் நஷனல் வங்கி - ஹோமாகம கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்களை மீள அறவிடும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை

### காலி வக்வெல்லையில் பெறுமதிவாய்ந்த சொத்து பகிரங்க ஏலவிற்பனை

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் அம்பதலன் பஹல அலுத்குரு கோறள தெற்கில் கொட்டிக்காவத்தை - முல்லேரியா பிரதேச சபை எல்லைகளினுள் கிட்டம்புஹுகளில் அமைந்த ஜயா மாவத்தையில் 15 ஆம் இலக்க வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ளதால் அதன் மீதுள்ள கட்டிடங்களும் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எஸ். விக்ரமசிங்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2001 மாச்சு 7 ஆந் திகதிய 6042 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் ஏ என அடையாள மிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித் துண்டு அடங்களும்.**

**(காணியின் பரப்பளவு : (0ஏ. 0றூ. 25.20பே.)**

*(கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு பீ. டீ. ரி. தர்மதிலக்க என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2003 சனவரி 7 ஆந் திகதிய 444 ஆம் இலக்க முறியின் மீது வருமதியான கொடுப்பனவில் கடப்பாட்டாளர்கள் தவறுகை புரிந்துள்ளாராதலால் பள்ளேவத்தகே பிரியந்த கொஸ்தா மற்றும் பள்ளேவத்த கமகே ஜயன சந்திரகாந்தி என்போரினால் ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட்டுக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.)*

ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட்டினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் 2007.03.28 ஆந் திகதியன்று மு. ப. 10.30 மணிக்கு மேலே குறிப்பிடப்பட்ட ஆதனத்தை அது அமைந்துள்ள இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு**.- 2006.06.09 ஆந் திகதிய மற்றும் 2006 யூலை 18 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியை பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்**.- ஏல விற்பனை முடிவடைந்ததும் வெற்றியீட்டிய கொள்வனவுக்காரர், காசாப் பின்வரும் தொகைகளைச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூராட்சி அதிகார சபைக்குச் செலுத்த வேண்டிய விற்பனை வரி 1% ; உள்ளூரதிகார சபை இறுப்பனவுகளும் வேற் பெறுமதி வரியும் ;
(3) கொள்வனவு விலையின் ஏலவிற்பனையாளர் தரகான 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(4) மொத்த விற்பனைச் செலவும் ஏனைய இறுப்பனவுகளும் ;
(5) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசின் அத்தாட் சிப்படுத்தற் கட்டணமாக ரூபா 2,000.

கொள்வனவு விலையின் மிகுதி 90% விற்பனைத் திகதியில் இருந்து 30 வேலை நாட்களுக்குள் ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட்டின் வைப்பிலிடுதல் வேண்டும்.

மேலதிக விவரங்களும் உரித்துறுதிகளும் சம்பந்தப்பட்ட வேறு ஆவணங்களும் ஹோமாகம கிளையின் முகாமையாளரிடமிருந்து, அல்லது பிரதான முகாமையாளர், வரவு மேற்பார்வை அறவீடுகள்

பகுதி, ஹற்றன் நாஷனல் வங்கி லிமிட்டெட், தலைமை அலுவலகம், இல. 479, ரீ. பீ. ஜயா மாவத்தை, கொழும்பு என்பவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும்.

தொலைபேசி இலக்கம் : 011- 2661815, 2661816.

ஏர்வின் பெரேரா,
சத்தியப் பிரமாணஞ் செய்த மொழிபெயர்ப்பாளர்
உரிமம்பெற்ற ஏலவிற்பனையாளரும்,
பெறுமான மதிப்பீட்டாளரும் நீதிமன்ற ஆணையாளர்,
ஏலவிற்பனையாளரும், பெறுமான மதிப்பீட்டாளரும்.

இல. 3, பாகொட வீதி,
நுகேகொட,
தொலைபேசி இல. 2810145, 0777- 212602.

3-372/ 1

---

**வரையறுக்கப்பட்ட செலான் வங்கி - கிறேண்பாஸ் கிளை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ் விற்பனை

**பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை, உடுகஹபற்று, ஹோமாகம பிரதேச சபை எல்லைகளுக்குள் மத்தேகொடை கிராமத்தில் அமைந்துள்ளதும் "மத்தேகொட மூக்கலான" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஜீ. ஆர். நாணயக்கார அவர்களால் தயாரிக்கப்பட்டு 1971.5.11 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 311 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 4 என அடையாளமிடப்பட்டதுமான காணியினது) அதன்கண் அமைந்துள்ள மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து ;**

**(காணியின் விஸ்தீரணம் : 20 பேர்ச்சுக்கள்)**

**சொல்லப்பட்ட வரைபடம் இல. 311 இல் துண்டு 11 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டின் மீதான வழியுரிமையுடன் சேர்த்து**

**ஏல விற்பனை**

*(கடப்பாடுடையவர்களான, பன்னிப்பிட்டியில் பதிவு இல. டபிள்யு 1070 ஐக் கொண்ட "டேட் லங்கா எண்ரபிறைஸஸ்" எனும் பெயர் வடிவிலான நிறுவனத்தின்கீழ் பங்குதாரராக வியாபாரத்தைக் கொண்டுநடாத்தும் பிரியாணி ஜயவர்தன இரத்நாயக்க மற்றும் ரோஹன குமார பெரேரா கமகே ஆகிய இருவரும், பிரசித்த நொத்தாரிசு டி. பீ. எல். எச். எச். சில்வா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 1998.6.29 ஆந் திகதியிடப்பட்ட முறி இல. 1112 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள்.)*

வரையறுக்கப்பட்ட செலான் வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2007, மாச்சு 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 2004.07.30 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2004.06.25 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "தினமின" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளைப் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம் :**

(1) ஏல முடிவில் கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) விற்பனைத் திகதியிலிருந்து 30 வேலை நாட்களுக்குள் கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ;
(3) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தவேண்டிய உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதம்) ;
(4) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(5) ரூபா 35,071.87 ஐ விஞ்சாதவாறு மொத்த விளம்பரச் செலவுகளின் 50% (ஐம்பது வீதம்) ;
(6) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(7) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்தற் கட்டணம் ரூபா 2,500.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங் களையும் "கொழும்பு 3, காலி வீதி, இல. 90, 'செலிங்கோ செலான் கோபுரங்கள்', 12 ஆவது தளம், வரையறுக்கப்பட்ட செலான் வங்கி, பிரதிப் பொது முகாமையாளர் (சட்டசம்பந்தமான பகுதி)" அவர்களிடம் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. : 4-701000, 2456289.

டன்ஸ்டன் கெலார்ட்,
நீதிமன்ற ஆணையாளரும் தரகரும்
அரசினால் சான்றுப்படுத்தப்பட்ட
நிபுணத்துவம்பெற்ற ஏலதாரர்,
விலைமதிப்பிடுநரும் ஆதன முகவரும்.

இல. 42, துட்டுகெமுனு வீதி,
பாமன்கடை,
தெஹிவளை.
தொலைபேசி இல. : 2814743
தொலைபேசி/தொலைநகல் இல. : 2814742, 2814744
துரித அழைப்பு : 0772-250422

3-361

---

**வரையறுக்கப்பட்ட செலான் வங்கி - மொறட்டுவை கிளை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ் விற்பனை

**மொறட்டுவை, கோயில் (ரெம்பிள்) வீதியிலுள்ள பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை, பள்ளேபற்று, மொறட்டுவை நகர சபை எல்லைகளுக்குள் மொறட்டுமுல்ல, கோயில் வீதி வழியே அமைந்துள்ளதும் "முனமல்கஹவத்தை" என்ற "மஹவத்தை" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நில அளவையாளர் பி. எல். டி. பெர்னான்டோ அவர்களால் தயாரிக்கப்பட்டு, 1986.7.11 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 2138 இல் துண்டு சீ1பி என அடையாளமிடப்பட்டதுமான காணியினது) ஏல விற்பனை ;**

**(காணியின் விஸ்தீரணம் : 10 பேர்ச்சுக்கள்)**

*(கடப்பாடுடையவரான, மொறட்டுவையைச் சேர்ந்த அத்துலியன்கே சிறிமா நந்தனி, பிரசித்த நொத்தாரிசு ஏ. டபிள்யூ. ஏ. எம்மானுவல் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 1995.10.12 ஆந் திகதியிடப் பட்ட முறி இல. 500 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்)*

வரையறுக்கப்பட்ட செலான் வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2007, மாச்சு 27 ஆந் திகதி, செவ்வாய்க்கிழமை மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 2003.04.04 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2003.03.19 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "தினமின" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளைப் பார்க்கவும்.

**கொடுப்பனவு செலுத்தும் விதம் :**

(1) ஏல முடிவில் கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;

(2) விற்பனைத் திகதியிலிருந்து 30 வேலை நாட்களுக்குள் கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ;

(3) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தவேண்டிய உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதம்) ;

(4) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்);

(5) ரூபா 35,071.87 ஐ விஞ்சாதவாறு மொத்த விளம்பரச் செலவுகளின் 50% (ஐம்பது வீதம்) ;

(6) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;

(7) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்தற் கட்டணம் ரூபா 2,500.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங் களையும் "கொழும்பு 3, காலி வீதி, இல. 90, 'செலிங்கோ செலான் கோபுரங்கள்', 12 ஆவது தளம், வரையறுக்கப்பட்ட செலான் வங்கி, பிரதிப் பொது முகாமையாளர், சட்டசம்பந்தமான பகுதி" அவர்களிடம் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. : 4-701000, 2456789.

டன்ஸ்டன் கெலார்ட்,
நீதிமன்ற ஆணையாளரும் தரகரும்
அரசினால் சான்றுப்படுத்தப்பட்ட
நிபுணத்துவம்பெற்ற ஏலதாரர்,
ஆதன முகவரும் விலைமதிப்பிடுநரும்.

இல. 42, துட்டுகெமுனு வீதி,
பாமன்கடை,
தெஹிவளை.
தொலைபேசி இல. : 2814743
தொலைபேசி/தொலைநகல் இல. : 2814742, 2814744
துரித அழைப்பு : 0772-250422

3-362

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.